Foundation Programme
in Literacy, Numeracy and Skills
(FPLNS)

# தமிழ்
# TAMIL

## GRADE 9

Student's Workbook

Theme 4: Animals and Birds
**Importance of Animals**

MAHATMA GANDHI INSTITUTE
under the aegis of
MINISTRY OF EDUCATION AND HUMAN RESOURCE
Republic of Mauritius

2026

# Table of content

Guide to Educators . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . iii

Activity 1: Listen and repeat. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 1

Activity 2: Observe and label.. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 2

Activity 3: Answer the questions. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 3

Activity 4: Identify and speak. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 4

Activity 5: Fill in the blanks.. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 5

Activity 6: Dialogue/ Role play. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 6

Activity 7: Make simple sentences.. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 9

# Guide to Educators

## Learning Outcomes

- Spell and read the vocabulary words with appropriate pronunciation.
- Express ideas in simple sentences.
- Develop awareness and respect for animals.

## Activities

- Listen and repeat.
- Observe and label.
- Answer the questions.
- Identify and speak.
- Fill in the blanks.
- Dialogue/Role play.
- Make simple sentences.

## Other Proposed Activities

- Group singing or poem recital.
- Role play.

## Additional Resources

- Audios and videos.
- Pictures of nanimals and birds.
- Flash cards.

## Portfolio Assessments

- Skills-based assessments.

**Activity 1: Listen and repeat.**

**Listening and Reading Activities:**

- The Educator reads the song.
- The students listen and repeat.

# விலங்குகள் பூங்கா

போகலாம் போகலாம்
பூங்காவிற்குப் போகலாம்
நண்பர்களோடு சேர்ந்து
விலங்குகளைப் பார்க்கலாம்
சிங்கத்தின் கர்ஜனை
கேட்டிடலாம்
சிங்கம் போல துணிச்சலாக
இருக்கலாம்
மான்குட்டி
துள்ளிப்போவதைப்
பார்த்திடலாம்
மான்குட்டி போல குதித்து
விளையாடலாம்
போகலாம் போகலாம்
பூங்காவிற்குப் போகலாம்
நண்பர்களோடு சேர்ந்து
விலங்குகளைப் பார்க்கலாம்
குயிலின் பாட்டைக்
கேட்டிடலாம்
குயிலைப் போல பாடலாம்
மயிலின் நடனத்தைப்
பார்த்திடலாம்
மயில் போல அழகாக
ஆடலாம்

முயல் குதித்து ஓடும்
பாதையைப் பார்த்திடலாம்
முயல் போல வேகமாக
ஓடலாம்
ஆமை மெதுவாய் நடக்கும்
பாதையைப் பார்த்திடலாம்
ஆமை போல பொறுமையாக
நடக்கலாம்
போகலாம் போகலாம்
பூங்காவிற்கு போகலாம்
நண்பர்களோடு சேர்ந்து
விலங்குகளைப் பார்க்கலாம்
புலியின் கர்ஜனை
கேட்டிடலாம்
புலி போல வலிமையுடன்
ஓடலாம்
குரங்கு மரத்தில் தாவிக்
குதிப்பதைப் பார்த்திடலாம்
குரங்கு போல புத்திசாலியாகச்
சிந்திக்கலாம்
போகலாம் போகலாம்
பூங்காவிற்குப் போகலாம்

The Educator may access the audio-visual version of the above song through this link:
**https://youtu.be/odZbcGfwSSQ**
Other similar resources are available through the following:

- https://youtube.com/shorts/Mc3PzHqqTMU?si=_7CN_OwQLo_L0Kwh
- https://youtu.be/KJZ8qdKUitI?si=Ks45wI6Ay8z2OqIS
- https://youtube.com/shorts/3R5g5Vqqt7Q?si=NmhDPMdQ47lnJvmk

**Activity 2: Observe and label.**

**Reading and Writing Activities:**

- The Educator reads the given words.
- The students repeat and label the pictures accordingly.

(மரம், குளம், குரங்கு, பசு, மீன், கோழி, கொட்டகை, குதிரை, புல், முட்டைகள்)



**Activity 3: Answer the questions.**

**Listening, Reading and Speaking Activities:**

- The Educator reads the sentences.
- The students listen, repeat and answer the questions accordingly.

- பசு – பால்

பசு புல் மேய்க்கிறது.

பசு பால் தருகிறது.

- கோழி – முட்டைகள்

கோழி தானியம் தின்கிறது.

கோழி முட்டைகள் இடுகிறது.

- ஆடு – இறைச்சி/மாமிசம்

ஆடு கொட்டகையில் இருக்கிறது.

என் தோழனுக்கு ஆட்டு இறைச்சி/மாமிசம் பிடிக்கும்.

- தேனீ – தேன்

தேனீ தோட்டத்தில் இருக்கிறது.

தேனீ தேன் கொடுக்கிறது.

- செம்மறி ஆடு – கம்பளி

இந்தச் செம்மறி ஆடு வெள்ளை நிறம்.

செம்மறி ஆட்டின் கம்பளி மென்மையாய் இருக்கிறது.

க. எந்த விலங்கு பால் தருகிறது?

உ. எந்த விலங்கு முட்டை இடுகிறது?

ங. தேன் எங்கே கிடைக்கிறது?

ச. செம்மறி ஆடு எங்களுக்கு எப்படி உதவியாக இருக்கிறது?

ரு. ஆட்டிலிருந்து என்ன கிடைக்கிறது?

**Activity 4: Identify and speak.**

**Speaking Activity:**
The Educator:
- explains the importance and use of animals to the students.
- asks questions based on the given pictures. (An example has been provided below)
- The students observe the pictures and answer the questions.









குதிரை சவாரி/குதிரைப் பந்தயம்

க. இது எந்த விலங்கு?

உ. இந்த விலங்கு எப்படி இருக்கிறது? பெரியது/சிறியது?

ங. இது என்ன நிறம்?

ச. இது எங்கே இருக்கிறது?

ரு. இது என்ன செய்கிறது?

சு. இந்த விலங்கு எப்படி உதவியாக இருக்கிறது?

**Activity 5: Fill in the blanks.**

**Reading and Writing Activities:**
The students:
- read the following sentences with the help of the Educator and choose the appropriate words to fill in the blanks.
- read the complete sentences repeatedly.

க. ..................... பந்தயத்தில் வெல்லுகிறது. (குதிரை, யானை)

உ. நான் பாலைவனத்தில் ...................... மேல் சவாரி செய்கிறேன்.

(நாயின், ஒட்டகத்தின்)

ங. .............................. ஒரு பெரிய விலங்கு. (பூனை, யானை)

ச. .............................. ஒரு வலிமையான விலங்கு. (பசு, கோழி)

ரு. ......................... கனமான பை தூக்கிச் செல்கிறது. (கழுதை, எலி)

சு. என் ....................... என் வீட்டைக் காக்கிறது. (நாய், ஒட்டகம்)

எ. ..................... எலிக்குப் பின்னால் ஓடுகிறது. (கழுதை, பூனை)

அ. ......................... முட்டைகள் இடுகிறது. (கோழி, யானை)

கூ. ....................... வானத்தில் பறக்கிறது. (பறவை, குதிரை)

க0. குளத்தில் ஒரு ........................... இருக்கிறது. (மீன், எலி)

**Activity 6: Dialogue/ Role play.**

**Reading and Speaking Activities:**

The Educator:


- reads the text and the students repeat.
- asks the students to read the dialogue in pairs.
- encourages the students to enact the dialogue and add more ideas to the dialogue.
- The students encircle the correct answer based on the multiple-choice questions.

**மிருகக் காட்சிச்சாலையில் ஒரு நாள்**

பாலா: அடேகப்பா தேவி! அந்தப் புலியைப்  பார்.

தேவி: அது எவ்வளவு பெரியது! அங்கே பாரு பாலா, அந்தப் பறவை மிக அழகாக இருக்கிறது! அது ஒரு மயில். 

பாலா: அதன் இறகுகளில் பல நிறங்கள் இருக்கின்றன! மரத்தின் கீழே அந்தச் சிறிய ஆமை  பார்க்கிறாயா? அது மெதுவாக நடக்கிறது.

தேவி: ஆம், நான் அதைப் பார்க்கிறேன்! நாம் முன்னுக்குச் செல்லலாம், அந்த ஒட்டகச் சிவிங்கியைப்  பார். அது மரத்தின்மேல் உள்ள இலைகளைத் தின்கிறது. அது எவ்வளவு உயரமாக இருக்கிறது!



பாலா: ஓ! நான் ஓர் உரக்க ஒலியைக் கேட்கிறேன்! அது சிங்கம் செய்கின்ற ஒலி!

அது கர்ஜிக்கிறது. போய்ப் பார்ப்போம். பாரு பாரு! அது இறைச்சியைத் தின்கிறது.

தேவி: பாலா, உனக்குத் தெரியுமா? எனக்கு யானை  தான் மிகவும் பிடிக்கும்! அதன் பெரிய காதுகளும் நீண்ட தும்பிக்கையும் எனக்கு மிகவும் பிடிக்கும்!

பாலா: நான் இப்போதுதான் ஒரு பறவையைப் பார்க்கிறேன்! அது பறக்கிறது. இது ஒரு 'கெஸ்ட்ரல்' (Kestrel)  பறவை என்று நினைக்கிறேன்.

தேவி: ஓ, அது எவ்வளவு அழகாக இருக்கிறது! அங்கே பாரு பாலா! அது ஓர் ஒட்டகம்!  இந்த ஒட்டகம் 'துபாய்' நாட்டிலிருந்து வந்தது.

பாலா: அடுத்து குரங்கைப்  பார்க்கலாம்! அதன் நீளமான வாலைக் காண விரும்புகிறேன்!

தேவி: நல்ல யோசனை! குரங்கைப் பார்த்த பிறகு பாம்பைப்  போய்ப் பார்க்கலாம்.

பாலா: ஓ, இல்லை! நான் பாம்பைப் பார்த்தால் எனக்குப் பயம். நீ பார்க்கப் போகலாம். நான் உணவகத்தில் உன்னைக் காத்திருப்பேன்.

தேவி: சரி , பாலா.

க. பாலாவும் தேவியும் முதலில் எந்த விலங்கைப் பார்க்கிறார்கள்?

அ. யானையைப் | ஆ. மயிலைப்
இ. புலியைப் | ஈ. சிங்கத்தைப்

உ. எந்தப் பறவை 'மிகவும் அழகாக' இருக்கிறது என்று தேவி கூறுகிறாள்?

அ. மயில் | ஆ. 'கெஸ்ட்ரல்'
இ. குரங்கு | ஈ. புலி

ங. எந்த விலங்கு மெதுவாக நடக்கிறது?

அ. யானை | ஆ. குரங்கு
இ. புலி | ஈ. ஆமை

ச. பாலாவும் தேவியும் சிங்கத்தைப் பார்த்தபோது அது என்ன செய்து கொண்டிருக்கிறது?

அ. இறைச்சி தின்கிறது | ஆ. சத்தமாக குரலிடுகிறது/ கர்ஜிக்கிறது
இ. தூங்குகிறது | ஈ. நடக்கிறது

ரு. குரங்கின் வால் எப்படி இருக்கிறது?

அ. குட்டையானது ஆ. நீளமானது

இ. பெரியது ஈ. உயரமானது

சூ. தேவிக்கு எந்த விலங்கு பிடிக்கும்?

அ. ஒட்டகச் சிவிங்கி ஆ. புலி

இ. மயில் ஈ. யானை

எ. ஒட்டகம் எந்த நாட்டிலிருந்து வந்தது?

அ. ‘துபாய்’ ஆ. மொரீசியசு

இ. ‘இத்தாலி’ ஈ. இந்தியா

மாணவர்களே! உங்களுக்குப் பிடித்த விலங்குகளைக் குறிப்பிடுக.

.........................................................

.........................................................

.........................................................

.........................................................

.........................................................

## Activity 7: Make simple sentences.

**Speaking, Reading  and Writing Activities:**
The Educator explains the concept of taking care of animals.
The students:
- read the given words with the help of the Educator and make simple sentences.
- read the complete sentences repeatedly.
- share their experiences of how they take care of their animals.



சிறுமி - விளையாடு

______________________________

______________________________



நாய் - குளிப்பாட்டு

______________________________

______________________________



நாய்ப்பட்டி - சுத்தம் செய்

______________________________

______________________________



உணவு - கொடு

______________________________

______________________________



விலங்கு மருத்துவர் - கொண்டுபோ

______________________________

______________________________



நடப்பதற்கு  - கொண்டுபோ

______________________________

______________________________